2015 ஏப்ரல் 1]

அரசு இப்பகுதிவாழ் மக்கள் மருத்துவ வசதிபெற ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கு முன்னுரிமை அடிப்படையிலே பரிசீலித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அமைத்துத் தர முன்வருவார்களா எனத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை மக்கள்தொகையின் எண்ணிக்கைக்கேற்ப, விதிமுறைகளுக்கேற்ப வரும் காலத்தில் ஆய்வு செய்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

முற்பகல் 11-25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.எஸ்.என். நடராஜ் அவர்கள், கேள்வி நேரத்தின் போது குற்றச்சாட்டு சொல்லக்கூடாது என்ற அடிப்படையிலே, அவர் கூறிய அந்தக் குற்றச்சாட்டு அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.*

வினாக்கள்-விடைகள் முடிவுற்றன. (குறுக்கீடு)

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

2. சிறப்புக் கவன ஈர்ப்பு

(அ) ஓசூர் தனியார் பள்ளியில் மேல்நிலை கணிதத் தேர்வின்போது வினாத் தாள் வெளியானது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உட்காருங்கள் சொல்கிறேன். வேறு அலுவல் எடுத்துக்கொள்கிறேன், உட்காருங்கள். ஓசூர் தனியார் பள்ளியில் மேல்நிலை கணிதத் தேர்வின்போது வினாத் தாள் வெளியானதாக வந்த செய்தி குறித்து திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. மு.க. ஸ்டாலின், திரு. துரைமுருகன், திரு. எ.வ. வேலு, திரு. இ. பெரியசாமி, திரு. அர. சக்கரபாணி,*

[பேரவைத் தலைவர்] [2015 ஏப்ரல் 1

திரு. டி.பி.எம். மைதீன்கான் ஆகியோர் விதி 56-ன்கீழும், திரு. டி. செங்குட்டுவன், விதி 55-ன்கீழும், இந்திய கம்யூனிஸ்டு (மார்க்சிஸ்ட்) கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. அ. சவுந்தரராசன், செல்வி கே. பாலபாரதி, திரு. க. பாலகிருஷ்ணன், திரு. கே. தங்கவேல், திரு. ஏ. லாசர், திரு. ப. டில்லி பாபு, திரு. இரா. அண்ணாதுரை, திரு. ஆர். ராமமூர்த்தி, திரு. வீ.பி. நாகைமாலி ஆகியோரும், இந்திய கம்யூனிஸ்டு கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. எம். ஆறுமுகம், திரு. கே. உலகநாதன், திரு. பி.எல். சுந்தரம் ஆகியோரும், இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்களும், பாட்டாளி மக்கள் கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. கணேஷ்குமார் அவர்களும், மனிதநேய மக்கள் கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா, திரு. அ. அஸ்லம் பாஷா ஆகியோரும், புதிய தமிழகம் கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி ஆகியோரும் பேரவை விதி 55-ன்கீழ் அறிவிப்புக் கொடுத்துள்ளார்கள். இதை சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக் கொள்கிறேன். இதுகுறித்து அறிவிப்புக் கொடுத்தவர்கள் கட்சிக்கு ஒருவர் என்ற முறையில் சுருக்கமாக மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வரலாம். முதலில், தி.மு.க. கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன் அவர்கள். (குறுக்கீடு)

3. தகவல் கோரல்

(அ) குடிநீர்த் தட்டுப்பாட்டைப் போக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை

***திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சப்ஜெக்ட்டுக்குள் போய்விட்டேனே! (குறுக்கீடு) என்னவென்று சொல்லுங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள்.

திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் இரண்டு கவன ஈர்ப்புத் தீர்மானங்களை எடுத்துக் கொண்டதற்கு நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.